RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22497

# பட்டினப்பாலையும் தமிழர் வாழ்வியலும்

அ. கிறிஸ்டல் ஷீபா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி - 627012) தொலையாவட்டம் - 629157, தமிழ்நாடு, இந்தியா

# Pattinapalai and the Lifestyle of Tamil

**A. Christal Sheeba [a, *]**

[a] Department of Tamil, Velankanni College (Manonaniam Sundarnar University, Tirunelveli-627012) Tholayavattam-629157, Tamil Nadu, India

* Corresponding Author: christalsheebavc@gmail.com

Received: 17-05-2022
Revised: 21-09-2022
Accepted: 03-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

The Sangam literature serves as a mirror reflecting the lifestyle of ancient Tamils. Among the Sangam literary works, "Pattinappalai" provides insights into the culture, customs, and traditions of the Tamil people. Unlike other works, "Pattinappalai" eschews exaggerated comparisons and imaginative descriptions, instead offering a vivid portrayal of the ancient Tamil way of life and history, functioning as a window into the past.

**Keywords:** Sangam literature, Pattinappalai, Ancient Tamil, Traditions

## முன்னுரை

பண்டைத் தமிழர்களின் வாழ்வியலை படம்பிடித்துக் காட்டும் கருவியாக விளங்குபவை சங்க இலக்கியங்கள் நவீன காலங்களில் பல வகையான இலக்கியங்கள் தோன்றிய பிறகும் என்றும் இளமை மாறாமல் புதுபொலிவுடன் திகழ்வது சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்கள் பாட்டு, தொகை என்று அழைக்கப்படுகிறது. பாட்டு என்பது பத்துப்பாட்டையும் தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். பத்துபாட்டு நூல்களில் ஒன்றான பட்டினப்பாலை நூலில் காணலாகும், பண்டைய தமிழ் மக்களின் வாழ்வியல் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமூக வாழ்க்கை

பண்டைய தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்தினார்கள். மக்கள் தங்கள் வாழ்க்கையை நிலத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்டனர். பட்டிப்பாலையில் வாழும் மக்களின் வாழ்வியல் கூறுகளான தொழில் உணவு, உடை, பண்பாடு போன்றவை நிலத்தின் அடிப்படையில் அமைந்து காணப்பட்டது.

## பரதவர்கள்

மீன்பிடித் தொழில் செய்கிறவர்கள் மீனவர் அல்லது பரதவர் என்று அழைக்கப்பட்டனர். பட்டினப்பாலையில் வாழும் மீனவர்களுடைய வாழ்வு மகிழ்ச்சி உடையதாய் காணப்பட்டது. இவர்கள் புகார் நகரில் கரிய மணல் மேட்டுப் பகுதிகளில் பெரிய சுற்றத்தாருடன் கூடி வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் தங்கள் தலையில் எண்ணெய் தடவாததால் தலைமுடி புல்லிய தோற்றத்துடன் காட்சியளித்தது. என்பதை பட்டினப்பாலை

"புன் தலை இரும் பரதவர்

பைந் தலை மா மகளிரொடு" (பட்டின.90)

என்னும் பாடலடியால் அறிய முடிகிறது.

பரதவர்கள் தாங்கள் செய்த தீவினைப் பாவங்கள் நீக்குவதற்காக காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் நீராடி தங்கள் பாவங்களைப் போக்கி வந்துள்ளனர்.

## உணவு

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது உணவு. உணவின்றி உயிர் வாழ இயலாது. சங்ககால மக்கள் தாவர உணவையும் புலால் உணவையும் உண்டு வந்துள்ளனர்.

பட்டினப்பாலையில் கூறப்படும் பரதவமக்கள் கடலில் பிடித்த இறால் மீன்களையும், வயலிலுள்ள ஆமையின், இறைச்சியையும் சுட்டுத் தின்றனர். இதனை பட்டினப்பாலை.

"கடல் இறாவின் சூடு தின்றும்

வயல் ஆமைப் புழுக்கு உண்டும்" (பட்டின-64)

என்னும் பாடல் அடிகள் எடுத்தியம்புகின்றது. மேலும் இம்மக்களிடம் கள்ளுண்ணும் வழக்கம் இருந்தது. இயற்கையாக கிடைத்த பானங்களை பருகினர். பனை மரத்திலிருந்து எடுக்கப்பெற்ற கள்ளினையும், நெல்லால் ஆக்கப்பட்ட கள்ளினையும் உண்டு வீரம் மிக்கவர்களாக இம்மக்கள் காணப்பட்டனர்.

## ஆடை

சங்ககால மக்கள் சிறந்த ஆடைகளை அணிந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்துள்ளனர். ஆடைகள் பெரும்பாலும் பருத்தி நூலால் ஆனவை. பட்டினப்பாலையில் வாழும் பரதவப் பெண்கள் பட்டாடையும் மெல்லிய வெண்ணிறத் துகில் ஆடையும் அணிந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## உறைவிடம்

காடுகளில் வசித்த ஆதிகால மனிதர்கள் தங்களை விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள சிறுசிறு கூரைகள் அமைத்து வாழ்ந்தனர். நாகரிக வளர்ச்சியின் விளைவாக குடிசைகள் அமைத்து வாழும் நிலை ஏற்பட்டது. பட்டினபாலையில் வாழும் பரதவர் குடில்கள் குறுகிய நுழைவாயிலைக் கொண்டு காணப்பட்டது. குடில்களை சுற்றி போரில் புறம் கொடாமல் விழுப்புண்பட்ட வீரனுக்கு நட்ட நடுகல்லாகிய அரண் அமைத்தது போல வேல்கள் ஊன்றப் பெற்றிருக்கும். தங்கள் இல்லங்களின் முன்னர் உள்ள மணற்பரப்பில் வலைகளை உலர்ந்துவார்கள் நீண்ட தூண்களைக் கொண்ட மாடங்களில் வாழும் பாதவர்கள் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர் என்பதை பட்டினப்பாலை

"நடு கல்லின் அரண்போல

நெடுந்தூண்டிலில் காழ்சேர்த்திய

வலை உணங்கும் மணல் முன்றில்" (பட்டினபாலை 79-83)

என்னும் பாடலடிகளால் மூலம் அறியமுடிகிறது.

## அலங்காரம்

பட்டினபாலையில் வாழ்ந்த ஆண்களும், பெண்களும் தங்களை அலங்காரம் செய்து கொண்டனர். பூவினையும் ஆம்பல் பூவினையும் தலையில் சூடினார்கள் ஆடவர்கள் கண்ணி என்னும் தலைமாலையை தலையில் சூடிக்கொண்டனர். என்பதைப்

"மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்

மகளிர் கோதை மைந்தர் மலையவும்" (பட்டின 109-110)

என்னும் பட்டினப்பாலை பாடல் வழியாக அறியமுடிகிறது. மதுவின் மயக்கத்தால் மகளிர் தம் கணவர் சூடிய கண்ணியைத் தம் கோதையாக நினைத்து தங்கள் தலையில் சூடிக் கொண்டனர் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

## பொழுதுபோக்கு

பரதவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் ஆட்டுக்கிடாய்கள், சேவல், கௌதாரி போன்றவற்றை மோதவிட்டு அதனைக் கண்டு தங்கள் பொழுதைப் போக்கினர் மேலும் கடல் நண்டுகளைப் பிடித்து விளையாடியும், மணற்பரப்பில் மணல்பவைகள் செய்தும் விளையாடினார்கள் என்பதை பட்டிப்பாலை விளக்குகிறது. மேலும் வீரர்கள் பொழுது போக்கிற்காக ஒருவர்க்கொருவர் புறமுதுகிடாது போர் செய்து தங்களை வலிமை மிக்க வீரர்களாக காட்டிக் கொண்டனர் பட்டினப்பாலையில் வாழும் பரதவ மக்கள் ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் கழித்தார்கள். என்பதை அறியமுடிகிறது.

## வழிபாடு

பண்டைத் தமிழ் மக்களிடையே உருவவழிபாடு முறைக் காணப்பட்டது. பரதவர்கள் சுறாமீனின் கொம்பை நட்டுக் கடல் தெய்வத்தை நினைவு கூறும் வண்ணம் வழிபாடு நடத்தி வழிபட்டனர். வழிபாட்டிற்கு வெண்கூதாளியின் மலரினையும், மடலை உடைய தாழையின் மலரினையும் மாலையாக அணிவித்து பரதவர்கள் கடல் தெய்வத்தை வழிபட்டனர்.

## விழாக்கள்

மக்கள் விழாக்காலங்களில் பல வகையான இசைக்கருவிகளை சங்ககாலத்தில் பயன்படுத்தி வந்தனர். பட்டினப்பாலையில் மக்கள் முருகப்பெருமானுக்கு விழாக்கள் நடத்தினர். இவ்விழாவில் குழல், யாழ் முழவு, முரசு போன்ற பலவகையான இசைக்கருவிகள் இசைக்கவிழத சிறப்பாக நடைபெற்றது. என்பதனை பட்டினப்பாலை 156 பாடல் விளங்குகிறது.

## வணிகம்

உற்பத்திப் பொருளை வாங்கி விற்கும் தொழில் வணிகம் ஆகும். காவிரிப்பும்பட்டினத்தில் வணிகம் சிறப்புடன் நடைபெற்றது. மேற்கத்திய நாடுகளிலிருந்து நீர்வழியாகவும், நிலம்வழியாகவும் பலவகையான நறுமணப் பொருட்கள், மாணிக்கம், பவளம மற்றும் விலையுயர்ந்தப் பொருட்களும் கொண்டு வரப்பட்டன என்பதை பட்டிப்பாலை

"நீர் நாப் பண்ணும் நிலத்தின் மேலும்

ஏமாப்ப இனிது துஞ்சி" (பட்டின 194 -195)

என்னும் பாடல்வரிகள் மூலம் சோழநாட்டின் செல்வ செழிப்பிற்கு வாணிகம் மிகச் சிறந்த காரணமாய் விளங்கியது என்பதை அறிய முடிகிறது.

## கொடியும் அடையாளச் சின்னமும்

கடைத்தெருவில் அடையாளச் சின்னங்களாக கொடிகள் பறக்க விடப்பட்டன. உணவுப் பொருட்கள் விற்கும் கடைகள், இறைச்சி பொரிக்கும் முன்றாலிகள், கள் விற்கும் கடைகள் ஆகியவற்றில் கட்டப்பட்ட கொடிகள் கதிரவனின் கதிர்களையும் தடைச்செய்ததாக பட்டிப்பாலை கூறுகிறது. மேலும் கடல் வழியாக செல்லும் நாவாய்ஏளிலும் கொடிகள் கட்டப்பட்டு இருந்தன என்பதை படடினப்பாலை 180-பாடல் விளக்குகிறது.

## வணிகர்களின் வாழ்க்கைமுறை

பட்டிப்பாலை குறிப்பிடும் வணிகர்கள் நடுநிலைத் தவறாதவர்களாய் காணப்பட்டனர். அவர்களிடம் எப்போது உண்மையை பேசும் குணம் உடையவராய் திகழ்ந்தனர். பொய் சொல்லுதல் தம் குடிக்கு பழியாகும் என்று அஞ்சி நியாமான விலையில் பொருட்களை விற்றனர் என்பதைப் பட்டடினப்பாலை

"நெடு நுகத்து பகல்போல்

நடுவு நின்ற நல்நெஞ்சினோர்" (பட்டின 206-207)

என்றும் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கிய நூற்களில் ஒன்றான பட்டினப்பாலையின் வழியாக பண்டையத் தமிழ் மக்களின் பண்பாடு பழக்க வழக்கங்களை அறியமுடிகிறது. ஆண்களும் பெண்களும் பல வகையான ஆணிகளை அணிந்து தம்மை அழகு படுத்திக் கொண்டனர். வணிகம் நிலத்தின் வழியாகவும் நீரின் வழியாகவும் சிறப்பாக நடைபெற்றது. என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

## References

Davanaiya Pavanar, D. (2009) Pumbukar pathipagam, Chennai.

Jeyavanishree, J. (2014) pattinappalai, Kalaignaan Pathipagam, Chennai.

Sayabu Maraikayer, M. (2010) Pattina palai, Gangai Puthaka Nilayam, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License